# முதியோர் தங்கி நிற்றலும் பராமரிப்பும்: அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூகத்தை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு

**கே.எம்.எம். பளீல் ஹக்**

**ஆய்வின் முக்கியத்துவம்:**

சம காலத்தில் சனத்தொகைப் பெருக்கம் பல பரிமாணங்களில் உலகை அச்சுறுத்தும் ஒரு காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பொருளியலாளர்கள், சமூகவியலாளர்கள், குடித்தொகையியலாளர்கள் மற்றும் சூழலியலாளர்களால் சனத்தொகைப் பெருக்கம் தொடர்பான அவநம்பிக்கைவாதக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சனத்தொகைப் பெருக்கத்தைப் போன்று அதன் உள்ளார் அமைப்பு மாற்றங்களும் குறிப்பாக சிறுவர் தங்கிநிற்றல், முதியோர் தங்கிநிற்றல், பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற விடயங்கள் பல நாடுகளில் சமூகப் பொருளாதார அடிப்படையில் நீண்ட கால பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சனத்தொகையில் வயது முதிர்தலின் அதிகரிப்பு, சனத்தொகைக் கல்வியிலும் சமூக விஞ்ஞான ஆய்வுகளிலும் முக்கிய பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் தாபனம் ஒக்டோபர் முதலாம் திகதியைச் சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனம் செய்ததன் மூலம் முதியோர் பிரச்சினைக்குச் சர்வதேச முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் உலக சனத்தொகையில் முதியோர் சனத்தொகை அதிகரித்து வருவதாகும். உலக முதியோர் சனத்தொகை 2020இல் 100 கோடியைவிட அதிகமாகலாம் எனவும் வளர்முக நாடுகளில் அதனளவு 70 கோடியாக இருக்கும் எனவும் உலக சுகாதார நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது. இயற்கையான வயது முதிர்ச்சி, அதிகரித்துச் செல்லும் ஆயுள் எதிர்பார்க்கை, வீழ்ச்சியடைந்து செல்லும் பிறப்பு வீதம் என்பன உலக வயது முதிர்தலுக்குப் பிரதான காரணங்களாக அடையாளம் *காணப்பட்டுள்ளன* (Charles D. Nam, 1994)

1950இல் 41 வருடங்களாக இருந்த உலக சராசரி ஆயுள் எதிர்பார்க்கை 2020இல் 70 வருடங்களாக அதிகரிக்கலாம் என அறியமிடப்பட்டுள்ளது. அதேவேளை உலக பிறப்பு வீதமானது தொடர்ந்து குறைந்து செல்கின்றது. 1971இல் 2.1%ஆகக் காணப்பட்ட பிறப்பு வீதமானது 2007இல் 1.1%ஆக வீழ்ச்சியடைந்தது. இவ்விரு நிகழ்வுகளும் உலக சனத்தொகையில் முதியோரின் பங்கினை அதிகரிக்கச் செய்துள்ளன.

அதிகரித்துச் செல்லும் முதியோர் சனத்தொகை, பிரச்சினைக்குரிய ஒரு காரணியாக அடையாளம் காணப்படுவதற்குப் பல சமூகப் பொருளாதாரக் காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. நவீனத்துவமும் அதனால் ஏற்பட்டுள்ள சமூக மனப்பாங்குகளும் நடத்தை மாற்றங்களும் முதியோரைச் சமூகப் புறந்தள்ளலுக்கு உள்ளாக்கியுள்ளன. நகராக்கம், ஆண் பெண் தொழில் முயற்சி மற்றும் தொழில் ஈடுபாடுகள், தேசிய சர்வதேசிய புலம் பெயர்வுகள் போன்ற காரணிகள் முதியோரைத் தனிமைப்படுத்துதலில் குறிப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்துள்ளன. சம காலத்தில் முதியோர் தங்கி நிற்றலின் பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்புக்கள் முதியோர் பராமரிப்பை சிக்கல் நிறைந்ததாக ஆக்கியுள்ளன.

முதியோர் தொடர்பாகப் பல ஆய்வுகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துறையில் Moody, Minkler, Butler போன்றோர் முன்னணி ஆய்வாளர்களாக உள்ளனர். இவ்வாய்வுகள் *முதுமையின் விளைவுகள், பராமரிப்பு, வளஒதுக்கீடு, புறமொதுக்கல்* பற்றிய ஆய்வுகளாக உள்ளன. சமூக மூப்பியல் தொடர்பான ஆய்வுகள் 1950களில் தோற்றம் பெற்று 1990களில் முக்கியத்துவம் பெற்றன. கியுமிங் மற்றும் ஹென்றி என்பவரால் முன்வைக்கப்பட்ட செயற்பாடு இன்மைக் கோட்பாடு (Theory of disengagement), குட்னர் மற்றும் லெபோ என்பவரால் முன்வைக்கப்பட்ட முதுமை – நடவடிக்கை தொடர்பான கோட்பாடு (Aging – activity theory), பேர்னாட் எஸ் பிலிப்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்ட வயோதிபம் – வகிபங்கு தொடர்பான அணுகுமுறை (Aging – Role Approach) என்பன முதுமை பற்றிய பிரதான கோட்பாட்டு ஆய்வுகளாகக் காணப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கங்கள்:**

இந்த ஆய்வு பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- முதியோர் சனத்தொகை பற்றியும் முதியோர் தொடர்பான பிரச்சினைகளையும் தங்கிநிற்றலையும் தெரிந்து கொள்ளுதல்
- நடைமுறையில் பின்பற்றப்படும் முதியோர் பராமரிப்பு முறைகளை அறிதல்
- முதியோர் பராமரிப்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணுதல்
- முதியோர் பராமரிப்பில் இஸ்லாமியக் கருத்துக்களுக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்
- முதியோர் பராமரிப்பைச் சிறப்பாக்குவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணுதல்

**முறையியல்:**
இந்த ஆய்வு பிரதானமாக முதன்மை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுத் தலைப்பானது முதியோர் தங்கி நிற்றல், அவர்களின் பராமரிப்பு ஆகிய இரு பிரதான விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இத்தகவல்கள் குறிப்பிட்ட சமூகத்திலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டன. இத்தகவல்கள் கேள்விக்கொத்து, கலந்துரையாடல், நேர்காணல், அலுவலகப் பதிவேடுகள் போன்ற முறைகள் மூலம் சேகரிக்கப்பட்டன. தகவல்களைச் சேகரிப்பதற்காக முதியோர்கள், முதியோரைப் பராமரிக்கும் உறவினர்களிடம் திறந்த மூடப்பட்ட வினாக்களைக் கொண்ட வினாக்கொத்துகளைப் பயன்படுத்தியும் கலந்துரையாடல்கள் மூலமும் சில குடும்பங்களில் நேர்காணல் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் செயலகப் பிரிவுகளில் முதியோர் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களிடமிருந்து வினாக்கொத்து மூலமும் நேர்காணல் மூலமும் தகவவழங்கப்பட்ட வினாக்கொத்துக்களில் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் 65 வயதிற்கு மேற்பட்டவர்களாகும். 66 வினாக்கொத்துக்கள் பூர்த்தி செய்யப்பட்டு மீளப்பெறப்பட்டன. வினாக்கொத்துக்களிலிருந்தும் நேர்காணல் மூலமும் சேகரிக்கப்பட்ட தகவல்கள் எளிய புள்ளிவிபர முறைகளின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**அம்பாறை மாவட்டத்தில் முதியோர் நிலை:**
இந்த ஆய்வு அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தையும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தையும் களமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் செயலகப் பிரிவுகளில் 2009ம் ஆண்டுக்கான முதியோர் சனத்தொகை, அதன் எதிர்கால எறியமிடல்களை பின்வரும் தகவல்கள் காட்டுகின்றன.

| பிரதேச செயலகம் | முதியோர் | சனத்தொகை |
|---|---|---|
| | 200 | 2025 எறியமிடப்பட்டது |
| கல்முனை | 13.3% | 23% |
| சாய்ந்தமருது | 14.2% | 25% |
| சம்மாந்துறை | 13.7% | 24% |
| நிந்தவூர் | 13.9% | 25% |
| அட்டாளைச்சேனை | 12.6% | 22% |
| அக்கரைப்பற்று | 12.8% | 22% |
| இறக்காமம் | 11.7% | 21% |
| பொத்துவில் | 12.4% | 23% |

*பிரதேச செயலக வளத்திரட்டு, 2009*

**முதியோர் பிரச்சினைகளும் தங்கிநிற்றலும்:**
இந்த ஆய்வின் முக்கிய இலக்குகளில் ஒன்று முதியோர் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதாகும். சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்தும் சந்திக்கப்பட்ட பல முதியோர்களிடமிருந்து நேர்காணல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களிலிருந்தும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பின்வருமாறு அடையாளம் காணப்பட்டன.

மிக அதிகமான முதியோர்களால் முன்வைக்கப்பட்ட முக்கிய பிரச்சினை உடல் தளர்ச்சியும் பலவீனமும் ஆகும். இது வயது முதிர்தலின் பொதுவான ஒரு வெளிப்பாடாகும். தவிர்க்க முடியாத இப்பாதிப்பினைப் புரிந்து கொள்ளுதல் இவர்களிடையே குறைவாகக் காணப்படுகின்றது. 84 சதவீதமான முதியவர்கள் பெரிய அல்லது சிறிய நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தனர். நோய் உடல் தளர்ச்சியையும் பலவீனத்தையும் ஏற்படுத்துவதில்

முக்கிய பங்களிப்புச் செய்துள்ளது. நோயின் காரணமாக மறதி, மனோநிலைப் பலவீனங்கள் இம்முதியோர்களிடம் காணப்பட்டன. இதன் காரணமாக தொழில் செய்ய முடியாதவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

முதியோர்களால் முன்வைக்கப்பட்ட மற்றொரு பிரச்சினை தொழிலின்மையாகும். சந்திக்கப்பட்ட முதியவர்களில் 18 பேர் ஓய்வூதியம் பெறுபவர்களாகவும், 21 பேர் உழைப்பதற்குரிய உடல் தகுதியற்றவர்களாவும் காணப்பட்டனர். மீதமுள்ள 36 நபர்கள் தொழில் செய்ய விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். இவர்களது முதுமை தொழில் தருனரிடத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தவில்லை. தொழிலின்மை காரணமாக வருமானமற்ற தங்கிநிற்போராக இவர்கள் கணிக்கப்படுகின்றனர். பராமரிப்பாளர்களிடையே வருமானம் – வருமானமற்ற முதியோரைப் பராமரிப்பதில் வேற்றுமை காட்டுவது மிகச்சிறிய அளவான குடும்பங்களிலேயே காணப்பட்டது. நிரந்தரமான தங்கிநிற்றல் முதியோரிடையே தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளது.

சிந்தனா முரண்பாடு முதியோர்கள் எதிர்கொள்ளும் மற்றொரு முக்கிய பிரச்சினையாகும். குறிப்பாக இளைய தலைமுறையினருடன் ஏற்படும் கருத்தொவ்வாமை இவர்களைப் பெரிதும் பாதித்திருந்தது. தமது அனுபவங்களைப் பகிர முற்படும் தமது கருத்துக்கள் இளைஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என முதியோர்கள் அனைவரும் கூறுகின்றனர். இதன் மூலம் இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்துவிடுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

முதியோர்களின் மற்றொரு பிரச்சினை தனிமை அல்லது தனது வாழ்க்கைத் துணையை இழந்து நிற்பதாகும். அதிகமான முதியவர்கள் தமது துணையை கணவன் அல்லது மனைவியை இழந்திருந்தனர். மிகக்குறைவானவர்கள் தமது பிள்ளைகள் மற்றும் உறவினர்களை இழந்து தனிமையடைந்த நிலையிலிருந்தனர். தமது முன்னாள் வாழ்க்கயை நினைத்து அதிக எதிர்பார்க்கைகள் அவர்களிடம் காணப்பட்டன. தமது குடும்பத்துடன் வாழ்ந்து வரும் முதியோர்களிடையே தலைமைத்துவத்தை இழக்க விரும்பாத மனநிலை காணப்பட்டது. தமது குடும்பம் தனது வழிகாட்டலின் கீழ் இயங்க வேண்டுமென இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமது தேவைகள் எதிர்பார்க்கைகள் தொடர்பாக பின்வரும் பிரச்சினைகளையும் முதியோர்கள் முன்வைத்தனர். தமது கருத்துக்கள் புறக்கணிக்கப்படுதல், முக்கிய நிகழ்வுகளில் ஒதுக்கப்படுதல், கையில் பணப்புழக்கமின்மை, அதிகரித்துச் செல்லும் நோயும் தளர்ச்சியும், கலந்துரையாடலுக்கு நண்பர்கள் இல்லாமை, வெளிப்பொழுது போக்கு வசதிகளின்மை, பொது விடயங்களில் கலந்து கொள்ள முடியாமை போன்ற பிரச்சினைகளும் இவர்களால் எடுத்துக் கூறப்பட்டன.

**தங்கி நிற்றலின் வடிவங்களும் பராமரிப்பு முறைகளும்:**
ஆய்வுப் பிரதேசத்தில் முதியோர்கள் எங்கு தங்கியுள்ளனர், அவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றனர் போன்ற விபரங்கள் வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்டன. தரப்பட்ட விபரங்களிலிருந்து பின்வரும் விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

- தங்கி நிற்கும் இடம்
  - பிள்ளைகளின் வீடு 88%
  - பேரப்பிள்ளைகளின் வீடு 09%
  - உறவினர் வீடு 03%

- முதியோருக்கான வசதிகள்
  - தனி அறையும் கட்டிலும் (படுக்கை) 84%
  - மருத்துவ வசதிகள் 90%
  - நுளம்பு வலை, பாதுகாப்பு 60%
  - மேசை, கதிரை 31%
  - உணவு, தேநீர் 100%
  - பொதுப் பொழுதுபோக்கு வசதிகள் 54%

பெரும்பாலான முதியோர்கள் தமது பிள்ளைகளினாலேயே பராமரிக்கப்படுகின்றனர் என்பது இங்கு கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும். தமது பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பங்களில் பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் வீட்டில் தங்கி வாழ்கின்றனர். அதிகமான

பெற்றோர்களுக்கான படுக்கை வசதிகள், மருத்துவ வசதிகள், உணவு, தேனீர் போன்ற அன்றாடத் தேவை சார்ந்த விடயங்கள் மிகவும் திருப்தியான முறையில் வழங்கப்பட்டுள்ளன. சில வறிய குடும்பங்களில் பராமரிப்பாளரின் பொருளாதார வசதிகளுக்கேற்ப முதியோர்களுக்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பொழுதுபோக்கு வசதிகளும் கணிசமான அளவில் வழங்கப்பட்டுள்ளன.

முதியோர் மீதான பராமரிப்பு முறைகளை அறிந்து கொள்வதும் இந்த ஆய்வில் கவனத்தில் கொள்ளப்பட்டது. இங்கு பொருளாதாரப் பாராமரிப்பு, உடல்சார் பராமரிப்பு மற்றும் உளவியல் பராமரிப்பு என்பன கவனத்தில் கொள்ளப்பட்டன. பொருளாதாரப் பராமரிப்பு என்பது முதியோருக்கு உணவு உடை போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குதல், அவர்களது நாளாந்த சிறிய தேவைகளுக்காக கைச்செலவு என்ற அடிப்படையில் பணம் வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பெரும்பாலான குடும்பங்களில் பொருளாதாரப் பராமரிப்பு சிறப்பானதாகக் காணப்பட்டது. உயர் வருமானக் குடும்பங்களிலும் தொழில் புரியும் குடும்பத்திலும் இது உயர்வீதமானதாக இருந்தது.

உடல்சார் பராமரிப்பு என்பது மருத்துவ சேவைகளைத் தேவைக்கேற்ப பெற்றுக்கொடுத்தல், மருந்துகளைப் பெற்றுக் கொடுத்தல், வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படும்போது உடனிருந்து கவனித்தல், நாளாந்தம் முதியோரின் உடைகளையும் தங்குமிடத்தையும் சுத்தமாக வைத்திருத்தல், உடைகளை மாற்ற உதவி செய்தல், உடற்பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. பணக்காரக் குடும்பங்களிலும் உழைக்கும் ஆண், பெண்களைக் கொண்ட குடும்பங்களிலும் மத்திமமான மட்டத்தில் இப்பராமரிப்பு காணப்பட்டது.

உளவியல் பராமரிப்பு என்பது முதியோருடன் கலந்துரையாடல், தனிமையைக் குறைக்க உதவுதல், ஆறுதல் வழங்குதல், சிரமமான நேரங்களில் ஆற்றுப்படுத்தல், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உதவுதல் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றது. பொதுவாக தெரிவு செய்யப்பட்ட பெரும்பாலான குடும்பங்களில் இப்பராமரிப்பு மந்தமானதாகக் காணப்பட்டது. அது தொடர்பான அறிவு, செயலூக்கம் என்பன பராமரிப்பை மேற்கொள்ளும் பெரும்பாலான குடும்பங்களில் குறைவாகக் காணப்பட்டது.

ஆய்வில், அவதானிக்கப்பட்ட மற்றொரு விடயம் ஆண் – பெண் முதியோரின் தனித்தனியான பராமரிப்புப் பிரச்சினைகள் பற்றியதாகும். ஆண்களைவிட பெண்கள் சிறப்பாகக் கவனிக்கப்படுகின்றனர் என்பதே அதிகம் நடைமுறையில் இருந்தது. தாயின் மீதான மரியாதை, பராமரிப்பாளர்களாக பெண்கள் காணப்படுதல், பெண் பிள்ளைகளின் வீட்டிலேயே அதிகமான முதியோர்கள் தங்கிநிற்றல் போன்றவைகள் இதற்குக் காரணமாகும்.

**முதியோரைப் பராமரிப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:**
இந்த ஆய்வின் முக்கிய இலக்குகளில் ஒன்று முதியோரைப் பராமரிக்கும் விடயத்தில் பராமரிப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து கொள்வதாகும். தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிலிருந்து பின்வரும் பிரச்சினைகள் பொதுவாகவும் தனிப்பட்ட அடிப்படையிலும் முன்வைக்கப்பட்டன.

**காரணமின்றியும் அடிக்கடியும் கோபமடைதல்**
சில தேவையான விடயங்களை எடுத்துக் கூறும்போது அவற்றைக் கேட்காதிருத்தலும் மறுதலித்தலும், அடிக்கடி முரண்படுதல், குடும்ப நடத்தைகளை விமர்சித்தல், தேவையற்ற விடயங்களைக் கேட்பதைக் கொண்டு தொந்தரவு தருதல் போன்றன முதியோரால் ஏற்படும் முக்கிய பிரச்சினைகளாகக் கூறப்பட்டன. இயல்பு நடத்தைக்கு மாற்றமாகுதல் என்பதும் மற்றொரு பிரச்சினையாக சுட்டிக்காட்டப்பட்டது. இது மறதியுடன் கூடிய பேச்சு மற்றும் செயற்பாடுகள் முதியோரிடமிருந்து வெளிப்படுவதைக் குறிப்பிடுகின்றது. சமூக மாற்றங்களின் காரணமாக ஏற்படும் பரம்பரை இடைவெளியைப் புரிந்து கொள்ளாமையும் குறைபாடாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

**தம்மை இளமையாக்க முயலும் முதியோர் பிரச்சினைகள்**
பல முதியோர் தமது தோற்றங்களை இளமையாகக் காட்டிக் கொள்ள முற்படுகின்றனர். இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் தலைமயிரைக் கறுப்பாக்குதல் போன்றவற்றின் மூலமும் தொடர்ந்து தொழில் செய்வதற்காக நேர்முகப் பரீட்சைகளில் இளைஞர்களுடனான தொழில் போட்டியில் இறங்குவதால் தொழிலற்றிருக்கும் இளைஞர்கள் வெறுப்படையும் நிலை ஏற்படுகின்றது.